# வாசிகசாலை ஆண்டறிக்கை 2025

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | வாசிகசாலை செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0008 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | 2020 செப்டம்பர் |
| அறிக்கையிடல் காலம் | 2025 ஜனவரி - 2025 டிசம்பர் |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | நடு குழுமம் |
| முக்கிய பங்குத்தாரர்கள் | நடு குழுமம், பத்திரிகை வழங்குனர்கள் |
| அறிக்கையிடல் காலத்திற்குரிய செயற்றிட்டச் செலவு | 324,000 ரூபா |

செயற்றிட்ட அறிமுகம்

நூலக நிறுவனம் 2020 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வரும் “வாசிகசாலை” செயற்றிட்டம், இலங்கை மற்றும் புலம்பெயர் தமிழ் சமூகங்களில் வெளியாகும் சமகால பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் சஞ்சிகைகளை திறந்த அணுகலில் வழங்கும் நோக்கமுடைய ஒரு முக்கியமான எண்ணிம முயற்சியாகும்.

இச்செயற்றிட்டத்தின் மூலம், நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் வெளியாகும் வெளியீடுகள்:

- எண்ணிம வடிவமாக மாற்றப்பட்டு
- மென்கோப்புகளாக சேமிக்கப்பட்டு
- திட்டத்தின் இணைய தள முகப்பின் கீழ் இலவச அணுகலுக்காக வழங்கப்படுகின்றன

இதன் மூலம், இணையத்தில் ஒரு நிலையான “வாசிப்பு வெளி” **(Reading Space)** உருவாக்கப்படுகிறது.

செயற்றிட்ட இலக்கு

இலங்கை மற்றும் உலகளாவிய தமிழ் சமூகங்களில் வெளியாகும் பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் சஞ்சிகைகளை:

- விரைவாக சேகரித்து
- குறுகிய காலத்திற்குள் எண்ணிமப்படுத்தி
- உலகம் முழுவதும் உள்ள பயனாளர்களுக்கு இலவசமாக வழங்குதல்

இதன் மூலம், தமிழ் சமூகத்தின் சமகால அறிவுப் பரிமாற்றத்தை பாதுகாக்கும் ஒரு திறந்த தகவல் தளத்தை உருவாக்குதல்.

செயற்றிட்ட நோக்கம்

- சமகாலத்தில் வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள், இதழ்கள் பற்றிய பட்டியல் ஒன்றினைத் தயாரித்தல்
- நாளாந்தம் வெளியிடப்படுகின்ற பத்திரிகைகளை சேகரித்தல், சேகரிக்கப்பட்ட பத்திரிகைகளை எண்ணிமப்படுத்தல், அவற்றை இணையதளத்தில் பதிகை இடலுடன் மீள கையளிக்க வேண்டிய ஆவணங்களை கையளித்தல்.
- இலங்கை தமிழ் சமூகம் தொடர்பாக இலங்கையிலும் , பிற நாடுகளிலும் உள்ள பத்திரிகை, சஞ்சிகை, இதழ் ஆகியவற்றை அடையாளங்காணல்.
- வலையத்தளத்தில் இணைக்கப்பட வேண்டிய ஆவணங்களுக்கான அனுமதியினை பெறல்.

வாசிகசாலை செயற்றிட்டங்கள்/ அடைவுகள்

2020 ஆம் ஆண்டிலிருந்து 2025 ஆம் ஆண்டு வரை 55,074 பத்திரிகைகள், இதழ்கள் , சஞ்சிகைகள் ஆகியவை எண்ணிமப்படுத்தப்பட்டு செயற்றிட்ட முகப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

**2025** ஆண்டிற்கான அடைவுகள்

- 2025 ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தின் கீழ் 2995 பத்திரிகைகள், 159 சஞ்சிகைகள், 58 பிறநாட்டு சஞ்சிகைகள் என்பன இலவச அணுக்கத்திற்காக இணைக்கப்பட்டுள்ளன.

| பத்திரிகைகள் | அடைவு | சஞ்சிகைகள் | அடைவு | பிறநாட்டு சஞ்சிகைகள் | அடைவு |
|---|---|---|---|---|---|
| உதயன் | 364 | ஞானம் | 12 | காலம் | 01 |
| வலம்புரி | 365 | ஜீவநதி | 06 | தாய்வீடு | 12 |
| காலைக்கதிர் | 356 | சிவபூமி | 10 | காற்றுவெளி | 33 |
| தமிழ் Mirror | 188 | துணிந்தெழு | 11 | கலசம் | 04 |
| பாதுகாவலன் | 15 | ஞானச்சுடர் | 12 | தமிழர் தகவல் | 01 |
| தேசியம் | 02 | அனல் | 05 | வானவில் | 01 |
| தமிழன் | 80 | துமி | 12 | | |
| மாலைக்கதிர் | 251 | அருள் ஒளி | 10 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தென்னாடு | 11 | எழுநா | 11 | | |
| மாலைமுரசு | 364 | தமிழர் பொருண்மியம் | 23 | | |
| திருமலைத்தீபம் | 04 | Jaffna Monitor | 06 | | |
| காலைமுரசு | 365 | வெண்ணிலா | 04 | | |
| உதயம் (இலங்கை) | 90 | குருசேத்திரம் | 13 | | |
| மெட்ரோ Leader | 17 | | | | |
| வெற்றிமணி (ஜேர்மனி) | 13 | | | | |
| எதிரொலி (அவுஸ்திரெலியா) | 19 | | | | |
| உதயன் (கனடா) | 103 | | | | |
| விளம்பரம் | 24 | | | | |

தொடர்ச்சியாக வெளியிடப்படாத சில வெளியீடுகள்:

- அருள்ஒளி
- அமுதநதி
- சிவதொண்டன்
- இந்து தமிழர் குரல்

இவை வாசிகசாலை பகுப்பிலிருந்து நீக்கப்பட்டு, நிரந்தர ஆவண காப்பகப் பகுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளன.

சதவீத அடிப்படை அட்டவணை




சவால்களும் அதனை எதிர்கொள்ளும் பொறிமுறைகளும்

- சவால் - பிறநாடுகளில் வெளியாகும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளின் எழுத்து மூல அனுமதியை பெறல்

  தீர்வு - நூலக நிறுவனத்தின் எண்ணிம நூலக மற்றும் ஆவணகம் பகுதிப் பணியாளர்கள் மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு அனுமதியினை பெறுவதன் மூலம் இச்சவாலை வெற்றிகொள்ளக்கூடியதாக உள்ளது.

- சவால் - வியாபார நோக்கத்திற்காக வெளியிடப்படும் பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளை உடனடியாக பதிவேற்றம் செய்ய முடியாமை.

  தீர்வு - இவ்வாறான பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை குறிப்பிட்ட காலத்திற்கு பின்னர் பதிவேற்றுவதன் மூலம் வியாபார உரிமைகளும் பாதுகாக்கப்பட்டு,ஆவணப் பயன்பாட்டினையும் தொடர முடிகிறது.

- சவால் - Online மூலம் வெளிவரும் பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள் ஆகியவற்றின் தொடர்ச்சித்தன்மையின்மை.

  தீர்வு - பிரதான வெளியீட்டாளரை தொடர்பு கொண்டு வெளியீட்டு விபரங்களை உறுதி செய்வதன் மூலம் இச்சவாலை வெற்றி கொள்ள முடிகிறது.

- சவால் - செயற்றிட்டத்தினை திறம்பட மேற்கொள்வதற்கான நிதிப்பற்றாக்குறை.

தீர்வு - செயற்றிட்டத்திற்கான நிலையான நிதிப்பங்களிப்பினை அடையாளங்காணல்

எதிர்கால திட்டமிடல்

- இணைக்கப்படாத உள்ளூர் பத்திரிகைகளை அடையாளம் கண்டு இணைத்தல்
- புலம்பெயர் தமிழ் வெளியீடுகளை விரிவாக சேகரித்தல்
- அனுமதி பெறும் செயல்முறைகளை முறையாக்கல்
- செயற்றிட்டம் குறித்த தகவல் பரவலை அதிகரித்தல்

முடிவுரை

“வாசிகசாலை” செயற்றிட்டம், தமிழ் சமூகத்தின் சமகால அறிவு, அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு விடயங்களை பதிவு செய்யும் ஒரு முக்கியமான எண்ணிம செயற்றிட்டமாக ஆக உருவெடுத்து வருகிறது.

2025 ஆம் ஆண்டில் மட்டும் 3,000க்கு மேற்பட்ட வெளியீடுகள் இணைக்கப்பட்டுள்ளன என்பது, இந்தத் திட்டத்தின் செயல்திறனையும் அதன் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

இந்த முயற்சி தொடர்ந்தால், எதிர்காலத்தில் தமிழ் சமூகத்தின் சமகால வரலாற்றை முழுமையாகப் பதிவுசெய்யும் ஒரு திறந்த அறிவுக் களமாக இது வளரக்கூடிய திறன் கொண்டுள்ளது.

பின்னிணைப்பு
வாசிகசாலை